**தலைப்பு 011 – நிதி ஆணைக்குழு அலுவலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 011 - நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இ நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானது

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல˙ வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகபரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இற்கமைய செலவின மதிப்பீடு தயாரிக்காமையால் 05 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 8,811,623 மிகையாக இருந்ததுடன் 03 மூலதன செலவின விடயங்களில் ரூபா 175,195 மிகையாக இருந்தமை தேறிய ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 78 சதவீத வீச்சில் உள்ளன. | 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு நிதிப்பிரமாயங்கள், கூற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் சிக்கனமான வழியில் தயாரிக்கப் பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் பொருளாதார சிக்கலை நோக்குகையில் காலத்திற்கு காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரச முகாமைத்தவ சுற்றறிக்கைக்கமைய அவசியமான செலவுகள் மற்றும் கொள்வனவுகளை வரையறுப்பதற்கு வேண்டப்பட்டது. அந்த செலவிய விடயங்களின் பிரதான ஒதுக்கீடுகள் நிலவியமையால் திருப்பப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இற்கமைய செலவினப் பாதீடுகளை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் உள்ளபடியாக தயாரிப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டன.

| அவதானிப்பு | | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | | |
| 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை<br>(i) பிரிவு 06 | மீண்டெழும் செலவினங்களிற்கு இடையில் நி.பி 66/60 இன் கீழ் ரூபா 2,216,000 மாற்றப்பட்டிருந்தது. | நி.பி 66 இன் கீழ் வைப்பு மாற்றம் மீண்டெழும் செலவின விடயங்களின் சாதக மற்றும் எதிர்மறை பெறுமதிகளை | நிதிக்கூற்றுக்கள் தொடர்புபட்ட படிவங்களில் ஒண்மையான மற்றும் பூரணமான தரவுகளை பதிவதன் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆனால், நிகழ்ச்சித் திட்டம் ACA-2 இன பிரகாரம் செலவிய தொகுப்பு வழங்கபபடவில்லை. | சீராக்கவதன் மூலம் பூச்சியமாக இருக்கின்ற தேறிய பெறுமதியை படிவ இல. 03 இன்படி வங்கிக்கு திருப்பப் பட்டது. | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 7.7 | காசு மற்றும் மொத்த பதிவு இரண்டும். நேரடி முறையை பயன்படுத்தி கணக்கிற்கு எடுக்கப்பட்டு தயாரிக்கப்பட வண்டிய போதிலும் ஆணைக்குழுவின் 2023 இனுடைய காசுப் பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டில் முற்பண சேகரிப்பு மற்றும் முற்பண கொடுப்பனவு ரூபா 814,544 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மொத்த வருகையாளர்களின் விடுபாடு காரணமாக முற்பண சேகரிப்பு மற்றும் முற்பண கொடுப்பனவு ரூபா 814,544 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவிற்கு சொந்தமான 04 வகையான 18 ரோனர் இருப்புக்கள் 2024 பெப்ரவரி 28 இல் களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | அந்த 18 ரோனர் இருப்புக்களை வழங்குவதற்கு பல அரசாங்க முகவர்கள் மற்றும் பாடசாலைகளிற்கு கடிதங்கள் அனுப்பபட்டிருந்ததுடன் இன்னமும் பதில் பெறப்பட்டிருக்கவில்லை. அந்த ரோனர்களை பேறுவதற்கு அமைப்புக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அவற்றினை ஏலத்திற்கு விடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | பொருட்களின் தேவை மற்றும் கிடைக்கக்கூடிய அளவு என்பவற்றினை கருத்திற்கொண்டு கொள்வனவு செய்ய வேண்டியதுடன் பயனற்ற ரோனர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஆணைக்குழுவிற்கு சொந்தமான 02 நிர்மாண இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் உபயோகமற்ற 08 ரயர்கள் என்பன கைதவிர்க்காமல் புயனற்ற பொருட்களாக களஞ்சியத்தில் விடப்பட்டிருந்தது. | அந்த 02 மோட்டார் இயந்திரங்கள் உள்ளடங்கலாக பயனற்ற ரயர்களை கைதவிர்ப்பதற்காக பரிந்துரைகளை பெறுவதற்கு குழுவொன்று நியமிக்கப் பட்டிருந்ததுடன் விரைவில் குழுவின் அறிக்கை பெறப்பட்டது. நான் எதிர்காலத்தில் அந்த பொருட்களை கைதவிர்ப்பதற்கு செயற்படுத்தப்படும். | அந்த 02 நிர்மாண இயந்திரங்கள் மற்றும் 08 பயனற்ற ரயர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். |

### 3.2. முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரி கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 இன் ஆணைக்குழுவின் மெய்மையாய்வு அறிக்கை பிரகாரம் 13 இருப்பு விடயங்களில் 60 அலகுகள் மிகையாகவும் 14 இருப்பு விடயங்களில் 48 அலகுகள் குறைவாகவும் இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் பொருட்களின் மிகைகள் மற்றும் குறைவுகள் தொழில்நுட்பமற்றவற்றுடன் தொடர்புபட்டதுடன் பொருட்களை பெயர்களை இனங்காண முடியாமையால் அதன் அடிப்படையில் அறிக்கையில் மிகைகள் மற்றும் குறைவுகள் சமர்ப்பிக்கப்படப்டிருந்தது பொருட்கள் உரிய அறிக்கையின் சரியாக இனங்காண முடியவில்லை. ஆகவே, அந்த மிகைகள் மற்றும் குறைவுகள் மற்றும் பரிந்துரைகளை பரீட்சிப்பதற்கு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் விரைவாக அவர்களுடைய பரிந்துரைகள் பெறப்பட்டிரந்தன. அந்த குறைவுகள் சரியாக சீராக்கப்பட வேண்டுமென நாங்கள் அறிவிக்கின்றோம். | அந்த மிகைகள் மற்றும் குறைவுகளிற்கு எதிராக முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 சிரேஸ்ர மட்ட பதவிகள், இரண்டாம் நிலையில் 07 வெற்றிடம், மற்றும் ஆரம்ப மட்டத்தில் 04 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக 14 வெற்றிடங்கள் நிலவியதுடன் 2024 மார்ச் 31 வரையும் 13 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | இலங்கை திட்டமில் பிரிவு பணிப்பாளர் அறிவித்திருந்ததுடன் பொது நிர்வாக அமைச்சு 01 சிரேஸ்ர மட்ட வெற்றிடத்திற்காக உத்தியோகத்தரை நியமிப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 02 இரண்டாம் நிலை வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும். பொது நிர்வாக அமைச்சு 03 முகாமைத்தவ சேவை உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு அறிவிக்கப் பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப பதவிக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ஒரு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்தார். அதே நேரத்தில் ஆரம்ப மட்டத்தில் வெற்றிடம் நிலவின. | செயலாற்றலை பாதிக்காமல் இருக்க அத்தியாவசிய பதவிகளிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |